# வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2021

வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இல் காணப்படும் *22* பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி *31.03.2021*ஆகும்.

## *02* ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

*02.1* வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு, ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவைஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

*02.2* இப் பரீட்சையில் சித்திபெற்று நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து *03*வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

*02.3* கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர் தகுதிகாண் காலமான *03* வருடங்களுக்குள் ஒரு வருடத்திற்கு குறையாததும் *500* மணித்தியாலங்களை கொண்டதுமான கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான முழுநேரக்கற்கைநெறி ஒன்றினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

*02.4* இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

*02.5* நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை *22* ஆகும்.

## *03* சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை *03/2016*க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2016**க்கு ஏற்ப கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-** ஆகும். (ரூபா *31,930* சம்பள படிநிலைக்கு முன் *1*வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்)

## *04* பொதுவான தகைமைகள் :-

*04.1* விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

*04.2* விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

*04.3* அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு *(06)* ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று *(03)* ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆ) விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து *(05)* வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

04.4 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு** குறையாதவராகவும், **30 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள்/ தொழில்சார் தகைமைகள்:-

**05.1** விண்ணப்பதாரி க.பொ.த (சா.த)பரீட்சையில் **ஒரே அமர்வில்** தமிழ் / சிங்களம் / ஆங்கிலம், கணிதம்ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

விண்ணப்பதாரி க.பொ.த (உ.த) பரீட்சையில் பொருளியல், விவசாயம், இணைந்த கணிதம், கணக்கியல், வணிக புள்ளிவிபரவியல் மற்றும் வணிகக் கல்வி ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் (பொது வினாத்தாள் நீங்கலாக) **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டமாயின் **ஒரே அமர்வில்** மூன்று (03) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்)

05.2 **தொழில்சார் தகைமைகள் :-**

விண்ணப்பதாரி பொல்கொல்லையில் அமைந்துள்ள, கூட்டுறவு அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் கணக்கியல் (Higher Accountancy)/ கணக்காய்வு (Auditing) /முகாமைத்துவம் (Management) ஆகிய கற்கை நெறிகளில் ஒன்றில் டிப்ளோமா அல்லது வட மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான உயர் மட்ட கற்கைநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரி இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் (Assosiation of Accounting Technician – AAT) இறுதி மட்டத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் கல்வி நிறுவனங்கள் அல்லது உள்ளூரில் நிறுவப்பட்ட வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் அல்லது வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் கணக்கியல் அல்லது முகாமைத்துவத்தில் டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டயக்கணக்காளர் பரீட்சையில் (Chartered Accountancy Examination) இடைநிலைத்தரத்தில் (Intermidiate) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

தேசிய உயர் தொழில்நுட்ப கல்லூரியிலிருந்து கணக்கீடு தொடர்பான 04 வருட உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

தேசிய உயர் தொழில்நுட்ப கல்லூரியிலிருந்து வணிக நிர்வாகம் தொடர்பான 03 வருட உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

## *06 ஆட்சேர்ப்பு முறை :-*

*06.1* எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாகாணரீதியிலான உயர்புள்ளி வரிசை ஒழுங்கிலும் ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

*06.2* மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர்புள்ளி வரிசை ஒழுங்கில் காணப்படும் வெற்றிடங்களிற்கு அமைவாக நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

*06.3* வெற்றிடத்தின் 03% மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## *07. பரீட்சைக் கட்டணம் :-*

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா ***500.00*** ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் ***"3401"*** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## *08. விண்ணப்பிக்கும் முறை :-*

*08.1* இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீx29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **31.03.2021** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*08.2* அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கூட்டுறவுஅபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - *2021*"**எனக் குறிப்பிடல் வேண்டும்

*08.3* விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

*08.4* விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் *03* நாட்களுக்கு முன்னர் வரை அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – ***021 221 9939***, தொலைநகல் இல - ***021 221 9940***)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**
கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப்பிரதி மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## *09.* ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## *10* பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத்தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 498,960.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

*12.* **பரீட்சைத் திட்டம்** *:-*

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். எனினும் தகைமையடைந்த சிங்கள மொழி மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து சிங்கள மொழி மூலத்திலும் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பாடவிதானங்கள் வருமாறு.

| ***இல*** | ***வினாப் பத்திரம்*** | ***பாட விதானம்*** | ***நேரம்*** | ***புள்ளிகள்*** |
|---|---|---|---|---|
| *01* | பொது உளச்சார்பு | இவ்வினாத்தாளானது தர்கிக்கும் திறன், பகுத்தாய்வுதிறன் என்பவற்றுடன் தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றில் 50 பல்தேர்வு மற்றும் சிறு வினாக்களை கொண்டு விண்ணப்பதாரியின் திறனை அளவிடுவதாக அமையும். | *01* மணித்தியாலம் | *100* |
| *02* | பொது அறிவு | இவ்வினாத்தாளானது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஏற்படக்கூடிய அரசியல், சமூகம், பொருளாதார மற்றும் கலாசாரம் சம்பந்தமான விடயங்கள் பற்றியும் மற்றும் கூட்டுறவுத் தத்துவம், வணிகம் தொடர்பிலான பல்தேர்வு மற்றும் சிறுவினாக்களைக் கொண்டு விண்ணப்பதாரியின் அறிவுத் திறனை பரீட்சிக்கும் வகையிலாக அமையும். | *01* மணித்தியாலம் | *100* |

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் மாகாண ரீதியிலான உயர்புள்ளிவரிசை ஒழுங்கு (Provincial Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

*13.* **பரீட்சைப் பெறுபேறுகள்** *:-*

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

*14.* பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| ***நகரம்*** | ***நகர எண்*** |
|---|---|
| யாழ்ப்பாணம் | ***01*** |
| மன்னார் | ***02*** |
| வவுனியா | ***03*** |
| கிளிநொச்சி | ***04*** |
| முல்லைத்தீவு | ***05*** |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

*15.* இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**சி.திருவாகரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*15.03.2021*